**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்**
2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.01/2019
அ.வ.எண்.295/2014

1. கே.ராஜு (இறந்துவிட்டார்) ...மனுதாரர்/வாதி

2. லஷ்மியம்மாள்
3. கணேசன்
4. அர்ஜுனன்
5. புஷ்பா
6. நர்மதா
7. கோகுலகண்ணன்
8. மகேஸ்வரி ...மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

/எதிராக/

1. C.ராஜி
2. D. செல்வம்
3. D. சின்னபையன்
4. கலா ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 16.08.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள்/உத்தேசதரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.எஸ்.சுந்தரராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு காலவரையறைச் சட்டம் பிரிவு 5 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u>** : -

இவ்வழக்கானது மனுதாரர்களின் தகப்பனார் ராஜீ என்பவரால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் மனுதாரர்களின் தகப்பனார் 16.05.2017 ல் மனுதாரர்களை வாரிசாக விட்டு இறந்துவிட்டார். வழக்கு சொத்து மனுதாரர்களின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டதாகும். மனுதாரர்களின் தகப்பனார் இறந்ததற்கு

பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்தபோது ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கு நிலுவையிலிருந்தது தெரிய வந்தது. மனுதாரர்களின் தகப்பனார் இறந்ததிலிருந்து 90 நாட்களுக்கு மனுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும். ஆனால் மேலே கூறிய காரணங்களுக்காக 605 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. எனவே மேற்படி காலதாமதத்தை மன்னித்து உத்தரவிட கோரி உத்தேச மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

## <u>2) எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. இறந்து போன ராஜீ பொய்யான தகவல்களுடன் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். ராஜீ 16.05.2017 ல் இறந்துவிட்டார் என்பது உண்மை. ஆனால் அவருடைய வாரிசுகள் மனுதாரர்கள் தான் என்பதற்கு எவ்வித ஆவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை. அவரின் இறப்பிற்கு பின்னிட்டு வழக்கு சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது எனக்கூறுவது பொய்யாகும். மேலும், வழக்கு நிலுவையில் உள்ளது குறித்து தெரியாது என்பதும், ராஜீ இறந்ததற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தில் நுழைய முயற்சி செய்த போது ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வழக்கு நிலுவையிலிருந்தது தெரிய வந்ததாக கூறுவதும் பொய்யாகும். மனுதாரர்கள் வேண்டும் என்றே காலதாமதத்தை ஏற்படுத்தவில்லை என்பதும் பொய்யாகும். இம்மனுவில் கூறியுள்ள காரணங்கள் பொய்யானதாகும். மனுதாரர்கள் ஒவ்வொரு நாள் காலதாமதத்திற்கும் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் காரணத்தை கூற வேண்டும். மேலும் மனுதாரர்களின் தகப்பனார் அ.வ.எண்.559/1995 தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட தீர்ப்பினை மறைத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். எனவே இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்களை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் ஒவ்வொரு நாள் காலதாமதத்திற்கும் உரிய ஆவணங்கள் மூலம் விளக்கியிருக்க வேண்டும். பலகாலமாக தூங்கிவிட்டு தற்போது தேவையற்ற இம்மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்களை இவ்வழக்கில் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்பதால் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள்/உத்தேசவாதிகள் தரப்பில் இவ்வழக்கானது மனுதாரர்களின் தகப்பனார் ராஜீ என்பவரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது எனவும், இந்நிலையில் மனுதாரர்களின் தகப்பனார் 16.05.2017 ல் மனுதாரர்களை வாரிசாக விட்டு இறந்துவிட்டார் எனவும், வழக்கு சொத்து மனுதாரர்களின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது எனவும், அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டதாகும் எனவும், மனுதாரர்களின் தகப்பனார் இறந்ததற்குபின்னிட்டு எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்தபோது ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது எனவும், அதில் இவ்வழக்கு நிலுவையிலிருந்தது தெரிய வந்தது எனவும், மனுதாரர்களின் தகப்பனார் இறந்ததிலிருந்து 90 நாட்களுக்கு மனுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் எனவும், ஆனால் மேலே கூறிய காரணங்களுக்காக 605 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது எனவும், எனவே மேற்படி காலதாமதத்தை மன்னித்து உத்தரவிட கோரி உத்தேச மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளாது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இறந்து போன ராஜீ பொய்யான தகவல்களுடன் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் எனவும், ராஜீ 16.05.2017 ல் இறந்துவிட்டார் என்பது உண்மை எனவும், ஆனால் அவருடைய வாரிசுகள் மனுதாரர்கள் தான் என்பதற்கு எவ்வித ஆவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை எனவும், அவரின் இறப்பிற்கு பின்னிட்டு வழக்கு சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது எனக்கூறுவது பொய்யாகும் எனவும், மேலும், வழக்கு நிலுவையில் உள்ளது குறித்து தெரியாது என்பதும், ராஜீ இறந்ததற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தில் நுழைய முயற்சி செய்த போது ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வழக்கு நிலுவையிலிருந்தது தெரிய வந்ததாக கூறுவது பொய் எனவும், இம்மனுவில் கூறியுள்ள காரணங்கள் பொய்

எனவும், மனுதாரர்களின் தகப்பனார் அ.வ.எண்.559/1995 தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட தீர்ப்பினை மறைத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் எனவும், எனவே இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது எனவும், எதிர்மனுதாரர்களை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், மனுதாரர்கள் ஒவ்வொரு நாள் காலதாமதத்திற்கும் உரிய ஆவணங்கள் மூலம் விளக்கியிருக்க வேண்டும் எனவும், ஆனால் பலகாலமாக தூங்கிவிட்டு தற்போது தேவையற்ற இம்மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர் எனவும், ஆகவே மனுதாரர்களை இவ்வழக்கில் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்பதால் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்குசொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்பதும், வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பது குறித்தும் இம்மனுவில் தீர்மானிக்கமுடியாது என்பதால் அவைகள் குறித்து இரு தரப்பிலும் முன்னிலைப்படுத்திய வாதங்கள் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மனுதாரர்கள் இறந்து போன ராஜுவின் வாரிசுகள் இல்லை என எதிர்மனுதாரர்கள் தரப்பில் கட்சி செய்யவில்லை. எனவே மனுதாரர்கள் ராஜுவின் வாரிசுகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iv) இருதரப்பிலும் மனுதாரர்களின் தகப்பனார் கடந்த 16.05.2017 ல் இறந்துவிட்டார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களின் தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்தபோது வழக்கு நிலுவையிலிருந்தது ஆவணங்களை பார்வையிட்டபோது தெரியவந்ததாக கூறியபோதும் அதற்கான எந்த ஒரு ஆவணசாட்சியத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை. இருந்தபோதும் இவ்வழக்கானது உரிமைவிளம்பல் பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கினை தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதாலும், மனுதாரர்கள் இவ்வழக்கினை நடத்த ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும், காலவரையறைச்சட்டம் பிரிவு 5-ன் கீழான மனுக்களை பரிசீலனை செய்யும் பொழுது கடுமையாக அணுகாமல் இலகுவாக அணுகலாம் என பல்வேறு முன்தீர்ப்புகளில் மாண்புமிகு உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் தீர்மானித்துள்ளதால் இம்மனு அனுமதிக்கதக்கது என இந்நீதிமன்றம்

தீர்மானிக்கிறது. ஆனால் மனுதாரர்கள் 605 நாட்கள் காலதாமதமாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1,000/- செலவுத்தொகையாக 11.09.2019 க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1,000/- செலவுத்தொகையாக 11.09.2019 க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க.12.09.2019.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-**திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

ஒப்பம்/-**திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**